வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=




ஈழநாடு
Eelanadu — ஈழநாடு


Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 07.03.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 67 பக்கங்கள் : 12

## இறுதி போரில் சிக்குண்ட மக்களுக்கு

# மனிதாபிமான உதவிகள் தடுக்கப்பட்டன ஆனால், திட்டமிட்டு நடக்கவில்லையாம்!

## சொல்கிறார் ரணில் விக்கிரமசிங்க

- மருத்துவமனைகளும் தாக்கப்பட்டன
- சவேந்திர சில்வா குற்றம் செய்யவில்லை
- கர்தினாலின் குற்றச்சாட்டுகள் முட்டாள்தனமானவை



கொழும்பு, மார்ச் 07

**வன்னி இறுதிப் போரில் சிக்குண்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் தடுக்கப்பட்டன. மருத்துவமனைகள்மீது விமான குண்டுவீச்சுகள் நடத்தப்பட்டன. ஆனால், இவை திட்டமிட்ட முறையில் - பெருமளவில் நடக்கவில்லை - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் போர்க் காலத்தில் எதிர்க்கட்சி தலைவராகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அல் ஜசீரா தொலைக்காட்சியில் நேற்று மாலை ஒளிபரப்பான நேர்காணலிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த நேர்காணலை செய்த மெஹ்டி ஹசன், விடுதலை புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் இலங்கை படைகள் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுவதைத் தடுத்தன என்றும் சில மருத்துவமனைகள்மீது குண்டுகள் வீசப்பட்டன எனவும் கூறினார்.

இதற்கு பதிலளித்த ரணில், அது (மனிதாபிமான உதவிகள் தடுக்கப்பட்டமையை) நடந்ததை நான் ஒப்புக்கொள்கிறேன். விமானப்படை (மருத்துவமனைகள்மீது) குண்டு வீசி தாக்கிய சந்தர்ப்பங்கள் இருந்தன. அவற்றில் சிலவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், தாக்குதல் பெரியளவில் நடந்ததாக 11

### கணேமுல்ல சஞ்சீவ கொலை:

## கைதான நபரே சூடு நடத்தியவர்!

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர்!

கொழும்பு, மார்ச் 07

கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரே துப்பாக்கிச் சூடு நடத்தியவர் என்பதற்கான போதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் கைரேகைகள் மற்றும் துப்பாக்கியில் காணப்படும் கைரேகைகள் பொருத்தப்படுமா என 11



படம் : ஐ.சிவசாந்தன்

### வடக்கின் பெரும் போர்:

## சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் நாளில் ஆதிக்கம்!

யாழ்ப்பாணம், மார்ச் 07

வடக்கின் பெரும் போர் பெருந்துடுப்பாட்ட போட்டியின் முதல் நாள் ஆட்டம் முடிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி வலுவான நிலையில் உள்ளது.

118ஆவது வடக்கின் பெரும் போர் பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்று வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 11

## தையிட்டி விகாரை விடயம் அரசின் நிலைப்பாடு என்ன?

### சபையில் சிறிதரன் எம்.பி. கேள்வி

கொழும்பு, மார்ச் 07

தையிட்டி விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்குமாயின் அதற்காக அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் அவர் இந்த கேள்வியை முன்வைத்தார்.

அத்துடன் தங்களின் காணியைக் கோரிப் 11



### பொன் அணிகளின் போர் :

## வட்டு. யாழ்ப்பாண கல்லூரி 153 ஓட்டங்களுக்கு சுருண்டது!

யாழ்ப்பாணம், மார்ச் 07

பொன் அணிகளின் போரில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி 153 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி வரும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி 2 விக்கெட்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.

108ஆவது பொன் அணிகளின் போர் பெருந்துடுப்பாட்டம் நேற்று யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாண 11

## உண்மைகளை மூடிமறைக்கவே இந்த அரசாங்கமும் முயல்கிறது

### தமிழ் அரசு கட்சியின் சுமந்திரன்

கொழும்பு, மார்ச் 07

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆதாரங்களை திரட்டும் பொறிமுறையை நிராகரிப்பதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவித்திருப்பதானது, கடந்தகால மீறல்கள் பற்றிய உண்மைகளை அறியவேண்டிய அவசியம் தமக்கு இல்லை அல்லது அவை மூடிமறைக்கப்படவேண்டும் என்ற தோரணையிலேயே செயல்படுவதைக் காண்பிக்கிறது என்று தமிழ் அரசுக் 11

### அமெரிக்காவின் வரி கொள்கை:

## அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது அவசியம்!

### ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 07

அயல் நாடான இந்தியா உட்பட பல நாடுகள்மீதான வரி சமநிலைப்படுத்தல் குறித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அறிவிப்பை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்திலேயே 11

## போதைப்பொருள் ஒழிப்புக்கு வடக்கில் மத்திய நிலையம்!

### மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கொழும்பு, மார்ச் 07

வடக்கில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனை குறைந்து ஏனைய போதைப்பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளது. எனவே, போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் விசேட மத்திய நிலையங்களை வடக்கில் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு 11

## வடக்கு, கிழக்கு மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை!

### மக்கள் பேரவை இயக்கம்

மட்டக்களப்பு, மார்ச் 07

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அன்று முதல் இன்று வரை நீதி கிடைக்கவில்லை என்று மக்கள் பேரவைக் கான இயக்கத்தின் உறுப்பினர் அருட்தந்தை ஜீவநந்த பீரிஸ் தெரிவித்தார்.

1,030ஆவது நாள் நீதிக்கான நடை பயணம் நேற்று மட்டக்களப்பு கல்லடி பாலம் - காந்தி பூங்கா வரை நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் பெரும் போர் பதிவுகள்












வடக்கின் பெரும்போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதும் 118ஆவது பெருந்துடுப் பாட்ட போட்டி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள்...!
(படங்கள் : ஐ.சிவசாந்தன் )

# பொன் அணிகளின் போர் பதிவுகள்







பொன் அணிகளின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணிகள் மோதும் 108ஆவது பெருந் துடுப்பாட்ட போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.03.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மாசி 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இந்தியாவை நட்பு சக்தியாக கருதினால்...!

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் வடக்கு, கிழக்கில் இந்தியா தவிர வேறு எவரையும் அனுமதிக்கமாட்டோம் என்று தனது பாராளுமன்ற உரையில் தெரிவித்திருக்கிறார். மறுபுறம் இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் செயலாளரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சத்தியலிங்கமோ மன்னாரில் அதானி திட்டத்தை மக்கள் எதிர்க்கின்றனர் என்று பாராளுமன்ற உரையில் குறிப்பிட்டிருக்கின்றார். ஒருவர் இந்தியாவை மட்டுமே ஆதரிப்போம் என்கிறார் இன்னொருவரோ, மக்கள் அதனை எதிர்க்கின்றனர் என்கிறார்.

மன்னாரில் காற்றாலை மின் திட்டத்தை அதானி நிறுவனமே கைவிட்டுவிட்டது. எனினும், அதானி நிறுவனம் வெளியேறுவதாகக் கூறிய பின்னரும் அரசாங்கம்தான் அதானியை துரத்துகிறது. அதானி குழுமம் போன்ற சர்வதேச முதலீட்டு நிறுவனத்துக்கு மன்னார் போன்ற இடமொன்றில் முதலீடு செய்வதால் வர்த்தக ரீதியில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இலாபம் கிடைக்க வாய்ப்பில்லை. ஏனெனில், அதானி குழுமத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு சிறிய முதலீடு. எனினும், இலங்கையின் வடக்கு - கிழக்கு இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கரிசனையோடு தொடர்புடைய அயலகப் பகுதியாகும். இந்த அடிப்படையில்தான் இந்தியாவின் பிரதான முதலீட்டுத் திட்டங்களுக்கான பகுதியாக வடக்கு - கிழக்கு அதிக கவனத்தைப் பெற்றிருக்கிறது. இதன் காரணமாகத்தான் சிங்கள கடும்போக்குவாதத் தரப்புகளும் இந்தியாவின் வடக்கு - கிழக்கு முதலீட்டுத் திட்டங்கள்மீது மட்டும் கண்வைக்கின்றனர்.

இந்த விடயத்தில் வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் ஈழத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் எவ்வித கரிசனையும் இருந்ததில்லை. அவ்வப்போது இந்திய தூதரகத்தைத் திருப்திப்படுத்திவிடலாம் என்னும் நோக்கில் சீனா தொடர்பில் கருத்துகளைத் தெரிவிப்பதைத் தவிர, அவர்களிடமிருந்து ஆக்கபூர்வமான பரிந்துரைகளோ, யோசனைகளோ முன்வைக்கப்படுவதில்லை. இந்தியத் தூதரக அதிகாரிகள் எதனையும் அறியாமல் இருக்கின்றனர் என்பது போல்தான் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கொள்வதுண்டு.

மன்னார் காற்றாலை மின்திட்டம் போன்றுதான் சம்பூர் அனல் மின் நிலையத் திட்டம் தொடர்பிலும் சத்தங்கள் எழுப்பப்பட்டன. பின்னர் அது கைவிடப்பட்டது. அந்த நேரத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இரா. சம்பந்தன், தனது இறந்த உடலின்மீதுதான் அந்த நிலையத்தை நீங்கள் கட்ட வேண்டிவரும் என்று - அப்போது, பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருந்தார். இது தொடர்பான தகவல்களை, அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தர்மலிங்கம் சித்தார்த்தன் முழுவதுமாக அறிவார். ஆனால், அந்தத் திட்டத்தைக் கைவிட்டு அதற்குப் பதிலாக காற்றாலை மின் திட்டம் ஒன்றை சம்பந்தன் இந்தியத் தூதரகத்திடம் பரிந்துரைக்கவில்லை. மாறாக ரணில் விக்கிரமசிங்கவிடமே தனது அதிருப்தியைத் தெரிவித்திருந்தார். ஏனெனில், சம்பந்தன் உதட்டளவில்தான் இந்தியாவுடன் இருந்தார்.

இது தொடர்பில் இந்தியத் தூதரகம் அப்போது அதிருப்தியடைந்திருந்தது. அதேபோன்று, இந்திய பிரதமர் நரேந்திர மோடி புதுடில்லிக்கு அழைத்த போது, மாவையின் மகனுக்குத் திருமணம் என்று கூறி, மோடியின் அழைப்பை அவமதித்திருந்தார்.

இந்தியாவின் திட்டங்கள் தொடர்பில் பிரச்னைகள் இருப்பின் அது தொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலில் இந்தியத் தூதரகத்துடனல்லவா பேச வேண்டும். மாறாக, பொதுவெளிகளில் விவாதிப்பதன் பொருள் என்ன? ஒரு நட்பு சக்தியை இவ்வாறு எதிர்கொள்வதில்லை. உண்மையான பிரச்னை வேறு - அதாவது, பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உதட்டளவில் இந்தியாவுக்கு ஆதரவானவர்களாகத் தங்களைக் காண்பித்துக் கொண்டாலும்கூட, அவர்களின் உண்மையான கரிசனையோ பாராளுமன்ற கதிரை மட்டும்தான். தற்போது சத்தியலிங்கம் தெரிவித்திருக்கும் கருத்து இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முதல் பெண் அதிபர் பதவியேற்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 07

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராக சி. எஸ். ஆர். செல்வகுணாளன் நேற்று வியாழக்கிழமை கட மையை பொறுப்பேற்றார்.

209 வருட வரலாற்றைக் கொண்ட யாழ்ப்பாணம் மத் திய கல்லூரியின் முதலாவது பெண் அதிபர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள் ளார்.

இதேவேளை, வடக்கின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத் திய கல்லூரி - யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதிய வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டப் போட் டியையும் நேற்றைய தினம் ஆரம்பித்து வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தத்தெடுத்த குழந்தையை கொன்ற தம்பதியருக்கு மரண தண்டனை!

கொழும்பு, மார்ச் 07

தத்தெடுத்த குழந்தையை சித்திரவதை செய்து கொன்ற குற்றத்துக்காக தம்பதியருக்கு மரண தண்டனை விதித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பின் விவரம் வருமாறு,

கொழும்பு - மாளிகாவத்தை பிரதேசத்தில் கடந்த 2018 மே 11ஆம் திகதி தத்தெடுக்கப்பட்ட 2 வயதுடைய குழந்தை ஒன்று சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டது.

இதனையடுத்து குழந்தையை தத்தெடுத்ததாகக் கூறப்படும் சந்தேக நபர்களான தம்பதியருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வந்தது.

இந்நிலையில், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க நேற்றையதினம் வழக்கில் தீர்ப்பளித்தார்.

இதன்போது, சட்ட மருத்துவ அதிகாரி நீதிமன்றுக்கு சமர்ப்பித்த மருத்துவ அறிக்கையில் உயிரிழந்த குழந்தையின் உடலில் சுமார் 90 காயங்கள் காணப்பட்டன என்றும் குழந்தை கடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டமையும் மருத்துவ பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

சந்தேகநபர்களான தம்பதியருக்கு எதிராக முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்கள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டமையை அடுத்து நீதிபதி இருவருக்கும் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். (ஐ)

### ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 07

சோலைக்குயில் அவைக் காற்றுக் களத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் சி.சிவராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடலில் கோகிலா மகேந்திரனின் "இணைகரத்தின் அயற்கோணங்கள்" சிறுகதை தொகுதி வெளியீடும் அனைத்துலக மகளிர் தினமும் "விழிசைச் சிவம்" நல்ல பெண்மணி விருது வழங்கல் நிகழ்வும் "வாழ்வின் தெரிவுகள்" பயிற்சி நிறைவு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கி. மகேந்திரராஜா அவர்களின் 75 ஆவது அகவை நிறைவு நாள், சாதனை சிறுவர் பரிசு வழங்கல், "இணைகரத்தின் அயற் கோணங்கள்" சிறுகதை விமர்சன அரங்கும், ஒலி வடிவ சிறுகதா நிகழ்வும், "ஒரு சோகம் இறுகும் போது..." சிறுகதா நிகழ்வு ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஐ)

### சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 07

யாழ்ப்பாணம், இளவாலை திருமறை கலாமன்றங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மகளிர் தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு இளவாலை திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலைக் களரியில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்த்துறை ஓய்வுநிலை விரிவுரையாளரும் எழுத்தாளருமான திருமதி ராணி சீதரன், சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்த்துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கவிதா சந்திரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

நடனங்கள், பாடல்கள், கவிதை போன்றவற்றுடன் சிறப்பு நிகழ்வாக யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும் "செம்பாத்தாள்" கூத்துருவ நாடகம் அரங்கேறும்.

### வடக்கு மகளிர் விவகார அமைச்சின் சர்வதேச மகளிர் தின விழா இன்று


யாழ்ப்பாணம், மார்ச் 07

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை சாவ கச்சேரி நகர சபை பொன் விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உரிமைகள் என்ற கருப்பொருளில் இந்த மகளிர் தின விழா நடைபெறவுள்ளது.

சர்வதேச மகளிர் தின விழாவின் ஓர் அங்கமாக பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் முகமாக உள்ளூர் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி, விற்பனை கூடங்களை இன்றும் நாளையும் சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டப வளாகத்தில் நடத்தவுள்ளன. (ஐ)

### அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கோபம் குறையும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். எரிச்சல் அடையலாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். எங்கு சென்றாலும் நல்ல வரவேற்பு கிடைக்கும். சிறப்பான நாள்.

**சிம்மம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**கன்னி**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள்.

**விருச்சிகம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. தாயார் ஆதரித்துப் பேசுவார். வெளியூரில் இருந்து நல்ல செய்தி வரும். புதியவர்கள் அறிமுகமாவார்கள்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**மகரம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**கும்பம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வீடு மனை வாங்குவது விற்பது லாபகரமாக அமையும்.

# சாவகச்சேரியில் சர்வதேச மகளிர் தினமும் உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், மார்ச்.07

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சால் வருடாந்தம் சர்வதேச மகளிர் தின விழா மாகாண அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இன்று 07 ஆம் திகதி "அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உரிமைகள்" எனும் கருப்பொருளை முன்னிலைப்படுத்தி (சமத்துவம், அதிகாரமளித்தல், அனைவருக்கும் சம உரிமைகள், அதிகாரம் மற்றும் வாய்ப்புக்களைத் திறக்கக் கூடிய நடவடிக்கை மற்றும் யாரும் பின்தங்காத ஒரு பெண்ணிய எதிர்காலம்) சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் காலை 09. 00 மணி முதல் சர்வதேச மகளிர் தின விழா சிறப்புற நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் ஓர் அங்கமாக மகளிர் சேவை வழிகாட்டல் கூடங்களும் பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் முகமாக அவர்களின் உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனைக்கூடங்களும் இன்றும் நாளையும் காலை 09. 00 மணி முதல் மாலை 06. 00 மணி வரை குறித்த வளாகத்தில் நடைபெறவுள்ளது. (எ)

# வழக்கை இல்லாமல் செய்ய இலஞ்சம் வாங்கிய பொலிஸ் அதிகாரியின் மகன்

யாழ்ப்பாணம், மார்ச்.07

யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தின் பதில் பொலிஸ் பொறுப்பதிகாரியின் மகன் 20 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்றதாக யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை - மூளாய் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த 3 ஆம் திகதி மதுபானம் அருந்திவிட்டு சாரத்தியத்தில் ஈடுபட்டவேளை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அந்த வழக்கை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லாமல் தடுப்பதாக கூறி யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியின் மகன் 20 ஆயிரம் ரூபாய் இலஞ்சமாகப் பெற்றுள்ளார். இருப்பினும், அந்த வழக்கு நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவருக்கான தண்டமாக 25 ஆயிரம் ரூபாய் அறவிடப்பட்டது.

இதனால், குறித்த நபர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். இலஞ்சம் பெற்ற குறித்த நபர் தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-05)

# வர்த்தக நடவடிக்கையை நவீன மயப்படுத்தி சுற்றுலாப் பயணிகளை கவர்தல் வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச்.07

"சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வர்த்தக நிலையங்களாக வடமராட்சி கிழக்கில் உள்ள வர்த்தக நிலையங்களை மாற்றியமைக்க வேண்டும்"- இவ்வாறு பிரதேச செயலாளர் கு. பிரபாகரமூர்த்தி தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு வர்த்தக சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"வர்த்தக நடவடிக்கைகளை நவீன மயப்படுத்தி சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய வர்த்தக நிலையங்களாக வடமராட்சி கிழக்கில் உள்ள வர்த்தக நிலையங்களை மாற்றியமைக்க வேண்டும்.

எமது பிரதேசத்துக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். ஆனால், அவர்கள் கடற்கரையை மட்டுமே பார்த்துவிட்டு செல்கின்றனர்.

அவர்கள் தங்கி நின்று அனைத்து வகையான உணவுகளையும் விரும்பி உண்ணுவதற்கான வர்த்தக நிலையங்கள் இங்கு இல்லை. எனவே, எமது பிரதேச வர்த்தக நிலையங்களை நவீன மயமாக்குவதன் மூலம் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து எமது பிரதேச வர்த்தக நிலையங்களை மேம்படுத்த முடியும்.

வர்த்தகர்கள் நியாயமான விலையில் தரமான பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க முடியும்"- என்றார். (எ- 05)



வேலணை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

# கலாநேத்ரா விருதுக்கு விண்ணப்பம் கோரல்

வவுனியா, மார்ச்.07

வவுனியா பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து வழங்கும் "கலா நேத்ரா" - 2025 விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் வவுனியா பிரதேச செயலக பிரிவை நிரந்தர வதிவிடமாக கொண்டிருப்பதுடன், 25 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்,

துறைசார்ந்த ஆவணப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தேவை ஏற்படும் பட்சத்தில் விண்ணப்பதாரி நேர்முகத் தெரிவுக்கு அழைக்கப்படுவார். கடந்த காலங்களில் பிரதேச விருது பெற்ற கலைஞர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியாது. குறித்த துறையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் விருது தெரிவிற்குள் உள்வாங்கப்படுவர்.

விண்ணப்பங்களை 18. 03. 2025ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இம்முறை சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை, நாடக எழுத்துரு, இசை (சாஸ்திரிய இசை, பண்ணிசை, ஆக்க இசை, மெல்லிசை) ,மரபுக்கலை (நாட்டுக் கூத்து, வில்லுப்பாட்டு), நாடக ஆற்றுகை, சிற்பம் ,ஓவியம், பரதம், வாத்திய இசை (வயலின், வீணை, புல்லாங்குழல், ஆர்மோனியம், மிருதங்கம், தபேலா, கடம், முகர்சிங், ஓர்கன் போன்றன), குறும்படம் ,இயல் (பேச்சு, விவாதம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம்) , அறிவிப்பு ,மரபு இசை (தவில், நாதஸ்வரம், பறை, உடுக்கு) , ஊடகம் போன்ன துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் மொட்டு எந்தச் சின்னத்தில் போட்டி

## பங்காளிகளுடன் பேச்சு ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 07

**உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது என்பது தொடர்பில் இன்னும் முடிவெடுக்கவில்லை எனவும், பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுவருகின்றது எனவும் பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.**

மேற்படி தேர்தலை எதிர்கொள்வதற்கான மொட்டு கட்சியின் ஏற்பாடுகள் தொடர்பில் அக்கட்சியின் செயலாளர் சாகர காரியவசத்திடம் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்படி தகவலை வெளியிட்டார்.

"இலங்கையிலுள்ள மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடும் நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது.

மொட்டுச் சின்னத்தில் களமிறங்கவே எதிர்பார்க்கின்றோம். எனினும், வடக்கு, கிழக்கில் சிறு மாற்றம் வரலாம்.



பங்காளிக்கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். எனினும், இவ்விரு மாகாணங்களிலும் சில இடங்களில் மொட்டு சின்னத்தில் வருவோம். ஏனைய மாவட்டங்களில் மொட்டு சின்னத்தின்கீழ் களமிறங்குவோம்."-என்றார். (அ)

# வடக்கில் போதைப்பொருள் பாவனை; முழுப் பொறுப்பும் இராணுவத்தினரே!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 07

வடக்கில் உள்ள போதைப் பொருள் பாவனைக்கு முழு பொறுப்பும் இராணுவத்தினரையே சாரும் என தமிழத் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் பிரச்னை ஏற்பட்டால் இராணுவ முகாம்களில் சென்று ஒழிவதாகவும் அவர் குற்றஞ்சுமத்தினார்.

பாராளுமன்றில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாடளாவிய



ரீதியில் மக்கள் தொகையை விடவும் மதுபானச் சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பா.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தவேண்டுமானால் நாட்டின் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# போக்குவரத்துப் பிரிவு பொலிஸாருக்கு வெகுமதிகளை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 07

போக்குவரத்துப் பிரிவுகளில் பணி புரியும் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பண வெகுமதிகளை அதிகரிக்க பொலிஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, 01.02.2025 முதல் குறித்த அதிகாரிகளுக்கு தற்போது வழங்கப்படும் வெகுமதித் தொகையை 25 வீதம் அதிகரிக்குமாறு, பதில் பொலிஸ்மா அதிபரால் சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, களப் பணிகளில் ஈடுபடும் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகள், துறை மற்றும் அலுவலகப் பணிகளில் ஈடுபடும் பரிசோதக தர நிலை அதிகாரிகள், பொலிஸ் சார் ஜன்ட்கள், பொலிஸ் கான்ஸ்ட பிள்கள் மற்றும் களப் பணிக ளில் ஈடுபடும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதிகள் ஆகியோருக்கு அதிகரித்த வெகுமதித் தொகை வழங்கப்படுகிறது.

மேலும், இவ்வாறு வழங்கப்படும் கொடுப்பனவுகள் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும் என்று பதில் பதில் பொலிஸ்மா அதிபர் மேலும் அறிவித்துள்ளார்.

அத்துடன் இந்த அதிகாரிகளை மதிப்பீடு செய்து ஊக்குவிப்பதன் மூலம் உத்தியோகபூர்வ கடமைகளின் செயல்திறன் மற்றும் தரத்தை மேலும் மேம்படுத்துவதே முதன்மையான நோக்கம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அறுவரில் ஒருவர் ஏழை

### சபையில் அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச் 07

இலங்கையில் ஆறு பேரில் வறுமையில் உள்ளதாகக் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சர் உபாலி பன்னிலகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கிராமிய வறுமை இந்த நாட்டுக்கு ஒரு பெரிய பிரச்னையாக மாறிவிட்டது.

நம் நாட்டில் ஆறு பேரில் ஒருவர் வறுமையில் இருக்கிறார்.

அவர்களில் 95 வீதத்துக்கும் அதிகமானோர் கிராமப்புற மற்றும் தோட்டப் பகுதிகளில் வசிக்கின்றனர்.

கிராமப்புற வறுமையை ஒழிப்பது தொடர்பில் தற்போதைய அரசாங்கம் முக்கியமாகக் கவனம் செலுத்தியுள்ளது.

கிராமப்புற, அரை நகர்ப்புறம் மலையகம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் கடுமையான வறுமையால் பாதிக்கப்படுகின்றனர்.

மேலிருந்து கீழாகப் பாய்ந்து செல்லும் அபிவிருத்திக்குப் பதிலாக, கிராம மக்களின் தேவைகளை ஆராய்ந்து, கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்த மக்களுக்கு வசதிகளை வழங்குவோம்-என்றார். (அ)

# தேசபந்து தென்னக்கோன் குறித்து தகவல் தெரிந்தால் அறிவியுங்கள்!

கொழும்பு, மார்ச் 07

தேசபந்து தென்னக்கோன் தொடர்பாக ஏதேனும் தகவல் தெரிந்தால் குற்றப் புலனாய்வுத் துறையிடம் தெரிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபரை கைது செய்வதற்காக தற்போது பல குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் தற்போது சட்டத்திற்குக் கீழ்ப்படியாமல் தலைமறைவாக உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரி வித்தார்.

நீதிமன்ற உத்தரவை மீறி தப்பிச் சென்ற சந்தேக நபர்களைக் கைது செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அதே நடைமுறையின் கீழ், முன்னாள் பொலிஸ் மா அதிபரையும் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், முன்னாள் பொலிஸ் மா அதிபரைக் கைது செய்வதற்கு பொலிஸார் எந்த சிறப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கமாட்டார்கள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# 195 விசேட வைத்தியர்கள் நாட்டிலிருந்து அண்மைய தினங்களில் வெளியேறினர்!

## காவிந்த ஜயவர்தன தகவல்

கொழும்பு, மார்ச் 07

அண்மைய தினங்களில் 195 விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சின் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்-சுகாதார சேவையை டிஜிற்றல் மயமாக்கலுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அது ஒரு நல்ல தீர்மானம்.

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க வேண்டுமெனில் புதிய தொழிநுட்பத்துடன் பயணிக்கவேண்டும். நோயளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக அது முக்கியமாகும்.

ஆரம்ப சுகாதார சேவைக்கு நிதி ஒதுக்கியுள்ளதை நாங்கள் வரவேற்கிறோம்.

தொற்று நோய் நிலைமைக்கு முகங்கொடுப்தற்கும் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி



ஒதுக்கப்பட்டுள்ளது. அதையும் பாராட்டுகின்றோம். நல்ல விடயங்களை பாராட்ட நாங்கள் பாசாங்கு காட்டமாட்டோம்.

அன்று நாம் சுவசெரிய ஆரம்பிக்கும் போது பல தடைகள் வந்தன. எனினும், சுவசெரிய சேவை மூலம் இன்று பல இலட்ச உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன-என்றார். (அ)

# 25 இலட்சம் ரூபா கப்பம் கோரிய பொலிஸ் பரிசோதகர் மீது வழக்கு!

கொழும்பு, மார்ச் 07

25 இலட்சம் ரூபாவை கப்பம் கோரிய பொலிஸ் பரிசோதகருக்கு எதிராக இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு வழக்கு தாக்கல் செய்துள்ளது.

சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 15 மில்லியன் ரூபாய் பெறுமதியுள்ள தங்க ஆபரணங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்கக் குறித்த பொலிஸ் பரிசோதகர் இலஞ்சம் கோரியமை தெரியவந்துள்ளது. குறித்த பொலிஸ் பரிசோதகர், புதிய செட்டியார் தெரு பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்தே கப்பம் கோரியுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இவ்வாண்டு இதுவரை 19 துப்பாக்கிச்சூடுகள்!

கொழும்பு, மார்ச் 07

நாட்டில் 2025 ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 19 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இச்சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 68 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் நேற்று கூறினார்.

பாதாளக் குழுக்களால் 12 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், தனிப்பட்ட மற்றும் இதர காரணங்களால் 7 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. 13 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன-எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நூலில் அவர்களின் உண்மை வெளிப்பட்டுவிடும் என அரசு பயம்!

## விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 07

**மக்கள் விடுதலை முன்னணியின் கடந்த காலம் குறித்து எழுதப்பட்ட நூல் வெளியீட்டு விழாவுக்காக முற்பதிவு செய்யப் பட்ட மண்டபத்தை தற்போது வழங்க முடியாது என அறிவித் துள்ளனர். அரசாங்கத்தின் உயர் மட்டத்திலிருந்து பிரயோ கிக்கப்பட்ட அழுத்தமே இதற்கு காரணமாகும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

தேசிய சுதந்திர முன்னணி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தனித்து கட்சி ரீதியாக குறிப்பிட்ட சில உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிட எதிர்பார்த்து உள்ளோம். நாம் எமது அரசியல் பயணங்களை ஒருபோதும் கைவிடப் போவதில்லை. மார்ச் 7ஆம் திகதி எனது பிறந்தநாளை முன்னிட்டு எழுதிய நூல் வெளியீட்டு விழாவை அரசு நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கேட்போர் கூடம் ஒன்றில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தேன். அந்த கேட்போர் கூடத்துக்கான முற்பணமும் செலுத்தப்பட்டுள்ள நிலையில் இரு தினங்களுக்கு முன்னர் அதனை எமது நூல் வெளியீட்டுக்கு வழங்க முடியாது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் பின்னணியில் அரசாங்கத்தின் அரசியல் சூழ்ச்சியே காணப்படுகின்றது. எனது நூலில் அவர்கள் தொடர்பான உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு விடும் என்ற அச்சத்தினாலே இவ்வாறு எமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இதற்கு நாம் கடும் கண்டனத்தை தெரிவிப்பதோடு நீதிமன்றத்தை நாடவும் எதிர்பார்த்து உள்ளோம். அந்த கேட்போர் கூடத்தில் நிர்வாக அதிகாரிகளால் மறுக்கமுடியாத இடத்திலி ருந்து இதற் கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1980 காலப் பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் செயல்பாடுகள் குறித்த உண்மைகள் எனது புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதற்கு அஞ்சியே இந்த அரசாங்கம் அந்த கேட்போர் கூடத்தை வழங்க மறுத்துள்ளது. இதற்கு முந்தைய ஆட்சி காலங்களில் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு கூட நாம் அரசு கேட்போர் கூடங்களை பயன்படுத்தி இருக்கின்றோம். அவ்வாறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எமக்கு தடை விதிக்கப்படவில்லை-என்றார். (அ)

# விலங்குகளைக் கணக்கெடுப்பதால் விவசாயிகளுக்கு தீர்வு கிடைக்காது

## விவசாய அமைப்புகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 07

பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் விலங்குகள் தொடர்பில் கணக்கெடுப்புகள் முன்னெடுக்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் மத்தியில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் விவசாய அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினராலும் இவ்வாறு குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விலங்குகள் கணக்கெடுப்பானது விவசாயிகளின் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வுகளை வழங்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் தமது பிரச்னைகளை அரசாங்கம் மறைக்க முயல்வதாக விவசாய அமைப்புகள் குற்றஞ் சுமத்தியுள்ளன.

குரங்கு, மர அணில், மயில் மற்றும் பூச்சியினங்களால் பயிர்களுக்கு தீங்குகள் விளைவிக்கப் படுகின்றன. எதிர்வரும் 15 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இந்த விலங்குகள் தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்படும்.

இதன்படி, அன்று காலை 8 மணிமுதல் 8.05 மணிக்குள் இது தொடர்பான கணக்கெடுப்புகள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை கட்டுப்படுத்தும் வகையில் அவற்றின் கணக்கெடுப்புகளை உரிய கிராம உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்குமாறு விவசாயம் மற்றும் கால்நடை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச வெசாக் பண்டிகை இந்த முறை நுவரெலியாவில்

கொழும்பு, மார்ச் 07

இந்த ஆண்டு அரச வெசாக் பண்டிகையை, நுவரெலியா மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடத்த புத்தசாசன, மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சு முடிவு செய்துள்ளது.

அதன்படி, தேசிய வெசாக் வாரம் மே மாதம் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறும் என அமைச்சு தெரிவித் துள்ளது.

அரச வெசாக் பண்டிகை குறித்து நடைபெற்ற கலந்துரையாடலின்போது, பௌத்த ஞானம் ஏற்படும் வகையில் இந்த ஆண்டு அரச வெசாக் கொண்டாட்டம் அனைத்து இன மக்களின் பங்கேற்புடன் நடத்தப்படவேண்டும் என அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, இந்த ஆண்டுக்கான அரச வெசாக் தினக் கொண்டாட்டத்தை மே 12 ஆம் திகதி வெசாக் பௌர்ணமி தினத்தன்று நுவரெலியாவில் நடத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. (அ)

# புத்த சாசன, சமய, கலாசார அலுவல்கள் அமைச்சின் புதிய செயலராக சேனாதீர!

கொழும்பு, மார்ச் 07

புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சின் புதிய செயலாளராக டபிள்யூ. பி. சேனாதீர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட் டதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி



நந்திக சனத் குமநாயக்க அவர்களால் டபிள்யூ.பி. சேனாதீரவிடம் நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. (அ)

# கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை உருவாக்க திட்டம்!

## உயர்நீதிமன்றத்துக்கு தெரிவித்த சட்ட மா அதிபர்

கொழும்பு, மார்ச் 07

தேர்தல்களின்போது தடுப்புக்காவல் கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை வழங்குவதற்கான ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை தேர்தல் ஆணைக்குழுவும் சிறைச்சாலைகள் திணைக்களமும் ஆராய்ந்து வருவதாக சட்ட மா அதிபர் உயர்நீதிமன்றத் துக்குத் தெரிவித்தார்.

கைதிகள் தேர்தலில் வாக்களிப்பதற்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பைத் தயாரிக்க தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி, முன்னாள் கைதி சுதேஷ் நந்திமால் டி சில்வா தாக்கல் செய்த மனு,

நேற்று முன் தினம் விசாரணைக்கு வந்தது. சட்ட மா அதிபரின் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி சஜித் பண்டார, நீதியரசர்கள் ஏ.எச்.எம்.டி. நவாஸ், அச்சல வெங்கப்புலி மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு முன் அழைக்கப்பட்டபோது சட்ட மா அதிபரின் இந்த அறிவிப்பு வெளியானது.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட போது, மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி லக்ஷன் டயஸ், இதுவரை சுமார் 66 நாடுகள் தங்களின் கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளதை நீதிமன்றத்தில் ஆதாரங்களை முன்வைத்து சுட்டிக்காட்டினார்.

மேலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவும் கைதிகளுக்கு அந்த உரிமை வழங்கப் பட வேண்டும் என்ற அவதானிப்புகளை சமர்ப்பித்துள் ளதாகக் கூறினார்.

அப்போது, சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி சஜித் பண்டார, கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை வழங்குவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் கீழ் தேர்தல் ஆணைக்குழு சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்த கடமைப்பட்டிருந்தாலும் சிறையில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்று சுட்டிக்காட்டிய அரச சட்டத்தரணி,

இந்தக் காரணத்துக்காகவே, பல நாடுகள் கைதிகளுக்கு அந்த உரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தற்போது வரையப்பட்டு வரும் புதிய தேர்தல் சட்டத்தின் கீழ் சிறப்பு வாக்களிப்பு நிலையங்களை நிறுவ முன்மொழியப் பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகளில் இந்த வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அரசு வழக்கறிஞர் தெரிவித்தார்.

எனவே, இந்த விவகாரங்களின் முன்னேற்றம் குறித்து தெரிவிக்க ஆறு மாத கால அவகாசம் அளிக்குமாறு அரச சட்டத்தரணி மேலும் நீதிமன்றத்தைக் கோரினார். (அ)

# சட்டவிரோத மின்கம்பியில் சிக்கி தாயும் மகனும் பரிதாப மரணம்!

கொழும்பு, மார்ச் 07

சூரியவெவ, ரந்தியகம பகுதியில் மின்சாரம் தாக்கி தாயும் மகனும் உயிரிழந்துள்ளனர் என சூரியவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்கு குழந்தைகளின் தாயான எனோஷா ஹர்ஷனி (வயது-38) அவரது மகன் கங்கன இந்துவர (வயது-5) ஆகியோரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை இந்த சிறுவன் பாலர் பாடசாலையில் இருந்து வீடு திரும்பி விட்டு, வீட்டின் பின்புறமாக தனது சிறிய சைக்கிளில் விளையா டிக்கொண்டிருந தபோது வீட்டின் அருகே உள்ள ஒரு பேக்கரியில் நிறுத்தப்பட்டிருந்த லொறியைப் பாதுகாக்க அங்கு சட்டவிரோதமாக பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிறுவன் சிக்கியுள்ளார்.

முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த தனது மகனைப் பார்க்க சம்பவ இடத்துக்குச் சென்ற தாய், அவன் மின் கம்பியில் சிக்கியிருப்பதைக் கண்டு அலறி அடித்து விடுவிக்க முயற்சி செய்துள்ளார்.

இதன்போது, தாய் மீதும் மின்சாரம் தாக்கியதோடு, இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவத்தின்போது சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட பாதுகாப்பற்ற மின்சார கம்பியில் மின் விநியோகம் துண்டிக்கப்படாமல் இருந்துள்ளமை மேலதிக விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக சூரியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டலந்த வதை முகாம்

# குற்றச்சாட்டுகளை மறுக்கிறார் ரணில்!

கொழும்பு, மார்ச் 07

**பட்டலந்த வதை முகாம் குறித்து தனக்கு எதிராக முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.**



அல்ஜசீராவுக்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

1980 களின் பிற்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சராக பதவி வகித்த காலத்தில் பட்டலந்தவில் சட்டவிரோதமாக தடுத்து வைத்தல், சித்திரவதைகள், கொலைகள் இடம்பெற்றன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளையே அவர் நிராகரித்துள்ளார்.

அரசாங்க விசாரணை அறிக்கை பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்கு பாதுகாப்பு வழங்கிய முக்கிய சூத்திரதாரி ரணில் விக்கிரமசிங்க என தெரிவித்திருந்தது டன் அங்கு மீறல்கள் இடம் பெறுவது குறித்து குறைந்தபட்சம் அவருக்கு தெரிந்திருந்தது எனக் குறிப்பிட்டுள்ளது.

அல்ஜீசிரா செய்தியாளர் தன்வசம் வைத்திருந்த அரசாங்க விசாரணை அறிக்கையின் நகல் வடிவத்தை காண்பித்து கேள்வி எழுப்பியவேளை முதலில் அவ்வாறான அறிக்கையொன்று உள்ளதையே மறுத்த ரணில் விக்கிரமசிங்க, பின்னர் அந்த அறிக்கை செல்லுபடித்தன்மை வாய்ந்ததா எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. எனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் எவையும் நிரூபிக்கப்படவில்லை என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

## முப்படைகளிலிருந்து தப்பிய 679 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 07

முப்படைகளில் இருந்து சட்ட ரீதியாக விலகாத 679 முப்படை வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை பொலிஸார் மற்றும் இராணுவ பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த சோதனைகளில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய பாதுகாப்பு செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் துய்ய கொந்தா, முப்படைகளில் இருந்து தப்பியோடிய அனைவரையும் உடனடியாக கைது செய்ய உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்திருந்தார். (அ)

## மின்சாரசபையின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அநுர கலந்துரையாடல்!

கொழும்பு, மார்ச் 07

மின்சார சபையின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது , எரிசக்தி துறையில் நிலையான மற்றும் நீண்டகால வேலைத்திட் டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

எரிசக்தி பாதுகாப்பு தொடர்பிலும் ,தொடர்ச்சியான எரிசக்தி விநியோகம் மற்றும் எரிசக்தி துறைக்கு அமைவாக தற்போதைய மற்றும் எதிர்பார்ப்பு நிலைமைகள் தொடர்பிலும் இதன்போது ஜனாதிபதி கவனம் செலுத்தினார். (அ)

## மீதெனிய முக்கொலை துப்பாக்கிதாரி கைது!

கொழும்பு, மார்ச் 07

மீதெனிய முக்கொலை சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி 18ஆம் திகதி இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டில் அருண விதானகமகே மற்றும் அவரின் இரு பிள்ளைகள் உயிரிழந்தனர்.

இந்தக் குற்றத்தை செய்தார் என்று சந்தேகிக்கப்படும் துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டுள்ள நிலையில்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் இதுவரை 8 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற 750 தொன் கோதுமை மா சிக்கியது

கொழும்பு, மார்ச் 07

வத்தளை - உஸ்வெட்ட கெய்யாவ பகுதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் சந்தைக்கு விநியோகிப்பதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற கோதுமை மா கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

புறக்கோட்டைப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின் போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சந்தைக்கு விநியோகிப்பதற்காக தயார் நிலையில் இருந்த மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற 750 தொன் கோதுமை மா இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாவின் உற்பத்தி திகதிகள் கடந்த ஆண்டு மார்ச் மற்றும் மே மாதங்களாகவும், காலாவதி திகதிகள் இந்த ஆண்டு மார்ச் மற்றும் மே மாதங்களாகவும் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், வண்டுகள் அதிகம் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (அ)

## சி.சி.ரி.வி. கமெரா இருந்தால் மட்டும் தனியார் பஸ்களுக்கு வீதி அனுமதி!

கொழும்பு, மார்ச் 07

தனியார் பஸ்களுக்கான வீதி அனுமதிப்பத்திரம் அந்த பஸ்களில் சி.சி.ரி.வி பாதுகாப்பு கமெரா கட்டமைப்பு பொருத்தப்பட்டு இருப்பின் மாத்திரம் வழங்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் பி.டி. விதாரன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட ஊடக கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொதுப் போக்குவரத்தின் போது பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகளைத் தவிர்ப்பதற்காக நீண்ட கால வேலைத்திட்டம் ஒன்று அவசியம் என்றும், பொதுப் போக்குவரத்தை பெண்களுக்கான பொது இடமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தற்போது பரவலாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், அது தண்டனைச் சட்டக் கோவை 345 ஆம் பிரிவின் கீழ் குற்றவியல் குற்றமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கான சட்டத்தை கடுமைப்படுத்தி உள்ளதாகவும் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக சமூக விவாதம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்றும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளால் தற்போது பெண்கள் தனிமைப் படுத்தப்படுவதாகவும், அவர்கள் தனியாகப் போராடவேண்டிய இருப்பதாகவும் சுட்டிக்காட்டிய அவர், அதற்காக முழு பயணிகள் சமூகமும் ஒழுங்குபடுத்தப்படவேண்டும் என்றும் அதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெளிவுபடுத்தினார். (அ)

## பொதுப் போக்குவரத்தில் பெண்கள் மீது வன்முறை

**109 என்ற இலக்கத்துக்கு முறையிடலாம் விசாரணை நடத்த குழுவொன்றும் நியமனம்**

கொழும்பு, மார்ச் 07

பொதுப் போக்குவரத்தில் பெண்களுக்கு எதிராக இடம் பெறும் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 109 என்ற துரித இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்குமாறு பிரதி பொலிஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்தார்.

தற்போது பொதுப்போக்குவரத்தில் பயணிக்கும் பெண்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருவதாக குறிப்பிட்டார்.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து தொடர்ந்தும் எமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.இவற்றைத் தடுக்கும் வகையிலேயே துரித இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான வன்முறை சம்பவங்கள் இடம்பெறும் போது அவை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அதன்மூலம், பெண்களுக்கான நீதியை பெற்றுத்தர முடியும் எனப் பிரதி பொலிஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்தார். (அ)

## பெருங்குடல் புற்றுநோய் இலங்கையில் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 07

இலங்கையில் பெருங்குடல் புற்றுநோய் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருவது கவலை அளிப்பதாகவும், 3,000 நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் குளோபோகன் 2022 தரவுகளின்படி,

சர்வதேச அளவில் பெருங்குடல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை சுமார் 1.9 மில்லியன் ஆகும், இறப்புகளின் எண்ணிக்கை 900,000 ஐ தாண்டியுள்ளது.

இந்த நோயின் அறிகுறிகளை முன்கூட்டியே கண்டறிவது பெரும்பாலும் முழுமையான குணப்படுத்துதலுக்கு வழிவகுக்கும் என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் ஹசாலி பெர்னாண்டோ கூறினார்.

புகைபிடித்தல் மற்றும் மது அருந்துவதால் பெருங்குடல் புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரிக்கிறது என்று அவர் எடுத்துரைத்தார்.

இதற்கிடையில், 2040 ஆம் ஆண்டு அளவில் சுமார் 3.5 மில்லியன் நோயாளிகள் பெருங்குடல் புற்றுநோயால் பாதிக்கப்படுவார்கள் என்று பெருங்குடல் அறுவைச் சிகிச்சை நிபுணர் வைத்தியர் வசந்த விஜேநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாள்வெட்டு கலாசாரத்தை முளையிலேயே கிள்ளியெறிக

## அநுர அரசிடம் சிறீநேசன் எம். பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச்.07

**மடக்களப்பில் வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். ஆரையம்பதியிலும் கத்திக்குத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. சமூகத்தை குழப்பும் விதத்தில் பல்வேறு குற்றச்செயல்பாடுகள் நடக்கின்றன. எனவே, வாள்வெட்டு கலாசாரத்தை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.**

ஆவா குழுவென்று ஒரு குழுவை யாழ்ப்பாணத்தில் உருவாக்கியிருந்தனர். கிரீஸ் மனிதர்களையும் உருவாக்கியிருந்தனர். இதனை உருவாக்கியவர்கள் யாரென மக்களுக்குத் தெரியும். இப்போது, மட்டக்களப்பிலும் வாள்வெட்டு கலாசாரத்தை உருவாக்குகின்றனர். இது தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இதனால், இவற்றை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# உணவகங்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

கல்முனை, மார்ச்.07

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள வியாபார நிலையங்கள், உணவகங்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும், கல்முனை மாநகர சபை ஆணையாளருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று நடைபெற்றது.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள வியாபார நிலையங்கள் மற்றும் உணவகங்களை பதிவு செய்கின்றபோது சுகாதார ரீதியாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள், முறையான திண்மக் கழிவகற்றல் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எஸ்.எம்.பௌசாத், கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகளான என். ரமேஷ், திருமதி சரப்டீன், என். மதன், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா உள்ளிட்ட மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலரும் கலந்துகொண்டனர். (எ)

# நோன்பு காலத்தில் திருட்டு அதிகரிப்பு

## நள்ளிரவு நடமாட்டத்தை தவிர்க்க காரைதீவு பொலிஸார் அறிவுறுத்தல்

காரைதீவு, மார்ச்.07

புனித ரமழான் நோன்பு காலத்தில் திருட்டுகள் அதிகமாகலாம். எனவே, நள்ளிரவு நடமாட்டத்தை பொதுமக்கள் முடிந்தளவு தவிருங்கள் என்று காரைதீவு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம், காரைதீவு மாவடிப்பகுதியில் அண்மையில் எந்தவித அடையாளமும் இன்றி சூட்சுமமான முறையில் வீட்டின் ஜன்னல் கழட்டப்பட்டு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

காரைதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் நகை, பணம் காணாமல் போயுள்ளதாக நேற்று முன்தினம் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் காரைதீவு குற்றத்தடுப்புப் பிரிவும் பொலிஸாரும் விசாரணைகளை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# உணவக உரிமையாளர்களுக்கு ஆலோசனையுடன் எச்சரிக்கை

சாய்ந்தமருது, மார்ச்.07

அம்பாறை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட கடற்கரை வீதியிலுள்ள உணவகங்கள் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் கியூ. ஆர். ஸ்ரிக்கரும் ஒட்டப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் முதலானோர் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற வகையில் உணவைக் கையாண்ட உணவக உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதுடன் அவ் உணவகங்களில் கடமை புரியும் ஊழியர்கள் கட்டாயம் மருத்துவச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகரால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், பொதுமக்கள் உணவு கையாளும் நிறுவனங்களில் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளை உடனடியாக அறிவிப்பதற்கு கியூ. ஆர். ஸ்ரிக்கரும் உணவகங்களில் ஒட்டப்பட்டமையால் பொதுமக்கள் உணவகங்களில் ஏற்படும் பிரச்னைகளுக்குரிய தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் என மருத்துவர் ஜே. மதன் குறிப்பிட்டார்.

இதேவேளை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் நோன்புக்கஞ்சி தயாரித்து விநியோகம் செய்யும் பள்ளிவாசல்கள் முதலானவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது, உணவகங்களில் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற முறையில் உணவைக் கையாண்ட இரண்டு உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அந்த உவப் பண்டங்கள் அழிக்கப்பட்டன. (எ-01)

# கிழக்கு மாகாண ஆளுநருடன் மருத்துவ அதிகாரிகள் சந்திப்பு

திருகோணமலை, மார்ச்.07

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.



இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி. ஏ. சி. என். தலங்கம, ஆளுநரின் செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் யூ. ஜி. திஸநாயக்க, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி. ஜி. எம். கொஸ்டா மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் பங்கேற்றனர்.

இதன்போது, மருத்துவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டது. இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஆளுநர் பதிலளித்தார். (எ)

# சர்வதேச மகளிர் தின விற்பனை கண்காட்சி

மண்முனை, மார்ச்.07

மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் வார நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு "நிலையான நாளையை உருவாக்குதல், அவளுடைய பலமே பாதை" என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு மார்ச் 02 முதல் 08 வரை தேசிய மகளிர் வாரம் கொண்டாடப்படுகின்றது.

அந்த வகையில் பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தல் மற்றும் சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஏற்பாடு செய்த விற்பனைக் கண்காட்சியானது நேற்று முன்தினம் பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிறு தொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட 30 இற்கும் அதிகமான உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (எ)



# ஐஸ் போதைப் பொருளுடன் கல்முனையில் ஒருவர் கைது

கல்முனை, மார்ச்.07

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை பழைய தபாலகம் அருகாமையில் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை கல்முனை விசேட அதிரடிப் படையினர் ஒருவரைக் கைது செய்தனர்.

கல்முனை விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கிராம் 450 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதான சந்தேக நபர் இதற்கு முன்னரும் பல தடவைகள் விசேட அதிரடிப் படையினரால் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மற்றும் கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா போரை விரும்பினால் இறுதிவரை போரிட சீனா தயார்!

பீஜிங், மார்ச்.07

**அமெரிக்கா போரை விரும்பினால், அது வரிப் போராக இருந்தாலும் சரி, வர்த்தகப் போராக இருந்தாலும் சரி, அந்த நாட்டுடன் இறுதிவரை போரிட தயாராக இருப்பதாக சீனா பதிலடி கொடுத்துள்ளது.**

அமெரிக்க பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பரஸ்பர வரிகள் குறித்து கடுமையான கருத்துக்களை வெளியிட்டார். அமெரிக்காவுக்கு எதிராக மற்ற நாடுகள் அதிக வரிகளை விதித்து வருவதாகவும் ட்ரம்ப் கூறினார்.

இப்போது, அந்த நாடுகளுக்கு எதிராக அவற்றை பயன்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். ஏப்ரல் 2ஆம் திகதி முதல் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் பொருட்கள் மீது அமெரிக்காவின் பரஸ்பர வரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் என்றும் ட்ரம்ப் அறிவித்தார்.

இதன்படி, சீனப் பொருட்களுக்கு முன்னர் விதிக்கப்பட்ட 10 சதவீத வரிகளை 20 சதவீதமாக ட்ரம்ப் உயர்த்தியுள்ளார். மேலும், அமெரிக்காவுக்குள் பென்டானில் உள்ளிட்ட வீரியமிக்க போதை மருந்துகள் கடத்தப்படுவதைத் தடுக்க சீனா போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் ட்ரம்ப் குற்றஞ்சாட்டினார்.

இந்த நிலையில், அமெரிக்கா போரை விரும்பினால், போரிடத் தயாராக இருப்பதாக சீனா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து சீன வெளிவிவகார அமைச்சின் அதிகாரபூர்வ "எக்ஸ்" வலைத்தள பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், "பென்டானில் பிரச்னை என்பது சீன இறக்குமதிகள் மீதான அமெரிக்க வரிகளை உயர்த்துவதற்கான ஓர் அற்பமான காரணமாகும். சீனாவின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கான எதிர் நடவடிக்கைகள் முற்றிலும் சட்டபூர்வமானவை மற்றும் அவசியமானவை.

பென்டானில் நெருக்கடிக்கு அமெரிக்காவே பொறுப்பு, மனிதாபிமானம் மற்றும் அமெரிக்க மக்கள் மீதான நல்லெண்ண உணர்வின் அடிப்படையில், இந்தப் பிரச்னையை கையாள்வதில் அமெரிக்காவுக்கு உதவ நாங்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

எங்கள் முயற்சிகளை அங்கீகரிப்பதற்குப் பதிலாக, சீனா மீது அமெரிக்கா பழி சுமத்த முயன்றுள்ளது. மேலும் வரி உயர்வுகள் மூலம் அழுத்தம் கொடுக்கவும், அச்சுறுத்தவும் முயல்கிறது. அவர்களுக்கு உதவியதற்காக எங்களைத் தண்டித்து வருகின்றனர். இது அமெரிக்காவின் பிரச்னையை தீர்க்கப் போவதில்லை.

மிரட்டல் மூலம் எங்களை பயமுறுத்த முடியாது. மிரட்டல் எங்களிடம் வேலை செய்யாது. சீனா மீது அதிகபட்ச அழுத்தத்தை பயன்படுத்த நினைப்பது தவறான கணக்கீடு. அமெரிக்கா உண்மையிலேயே பென்டானில் பிரச்னையை தீர்க்க விரும்பினால், அதற்கான சரியான வழி சீனாவுடன் கலந்தாலோசிப்பதேயாகும்.

ஆனால், அமெரிக்கா போரை விரும்பினால், அது வரிப் போராக இருந்தாலும் சரி, வர்த்தகப் போராக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த வகையான போராக இருந்தாலும் சரி, நாங்கள் இறுதிவரை போரிடத் தயாராக இருக்கிறோம்"- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றியை உறுதி செய்வேன்!

## இஸ்ரேல் இராணுவ தளபதி உறுதி

டெல்அவிவ், மார்ச்.07

"ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றியை உறுதி செய்வேன்"- இவ்வாறு புதிதாக பதவியேற்ற இஸ்ரேல் இராணுவத் தளபதி இயல் சமீர் தெரிவித்தார்.

இஸ்ரேல் இராணுவத் தளபதியாக செயல்பட்டு வந்தவர் ஹர்சி ஹலிவி. ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலுக்குள் நுழைந்து நடத்திய பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று ஹர்சி ஹலிவி தனது பதவியை இராஜினாமா செய்தார். ஆனால், ஹமாஸுக்கு எதிரான போர் நீடித்து வந்ததால் தொடர்ந்து அவர் பதவியிலிருந்தார். அதேவேளை, நேற்று முன்தினம் 5ஆம் திகதியுடன் இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகுவதாக ஹர்சி ஹலிவி அறிவித்தார். இதையடுத்து, புதிய இராணுவத் தளபதியை தெரிவு செய்ய இஸ்ரேல் அரசு ஆலோசனை நடத்தியது. இதன்படி, புதிய இராணுவத் தளபதியாக இயல் சமீர் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலையில், இயல் சமீர் நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார்.

பதவியேற்பு நிகழ்ச்சியில் பேசிய இராணுவத் தளபதி இயல் சமீர், "ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றியை உறுதி செய்வேன். அந்த அமைப்பினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ள பணயக் கைதிகள் அனைவரையும் மீட்பேன்"- என்றார். (எ)

# மீண்டும் போபர்ஸ் வழக்கு விசாரணை

புதுடில்லி, மார்ச்.07

இந்தியாவில் ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நடைபெற்றதாக கூறப்படும் போபர்ஸ் பீரங்கி ஊழல் வழக்கு விசாரணை மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. இந்த விவகாரம் தொடர்பான முக்கிய தகவல்களை வழங்குமாறு அமெரிக்காவிடம் இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த 1980களின் பிற்பகுதியில் ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. அப்போது, இந்திய இராணுவத்துக்கு சுவீடன் நாட்டிலிருந்து 155 எம்.எம். பீரங்கிகள் வாங்குவது தொடர்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. சந்தை மதிப்பை விட இரண்டு மடங்கு அதிகமாக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதாக அப்போது குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இதற்காக, போபர்ஸ் நிறுவனம் முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு இலங்கை மதிப்பில் 216 கோடி ரூபாய் வரை (இன்றைய மதிப்பு 2,780 கோடி ரூபாய்) இலஞ்சம் கொடுத்தாக சுவீடன் வானொலி இந்த ஊழலை முதல்முறையாக வெளிக்கொண்டு வந்தது. இது, 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவியதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

இந்த நிலையில்தான், போபர்ஸ் தொடர்பில் முக்கிய தகவல்களை வழங்குமாறு அமெரிக்காவிடம் இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது. (எ)

# ஹமாஸ் அமைப்பினருடன் அமெரிக்கா இரகசிய பேச்சு

வாஷிங்டன், மார்ச்.07

அமெரிக்க பணயக் கைதிகளை விடுவிப்பது, காஸாவில் போர் நிறுத்தத்தை நீடிப்பது தொடர்பில் ஹமாஸ் அமைப்பினருடன் அமெரிக்கா இரகசிய பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்தின் காஸா நகரை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் போர் மூண்டது. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அமெரிக்கா, எகிப்து, கட்டார் உள்ளிட்ட நாடுகளின் உதவியுடன் கடந்த ஜனவரி 15ஆம் திகதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதனடிப்படையில், மூன்று கட்டங்களாக போரை நிரந்தரமாக நிறுத்த முடிவெடுக்கப்பட்டது.

முதல் கட்டமாக ஜனவரி 19ஆம் திகதி அமுலுக்கு வந்த ஒப்பந்தத்தின் படி இஸ்ரேலும், ஹமாஸும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் கைதிகளை பரிமாறிக்கொண்டன. அடுத்தகட்ட போர் நிறுத்தம் ஏற்படுவதில் இன்னும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இந்தச் சூழலில், கெய்ரோவில் நடைபெற்ற அரபு நாடுகளின் மாநாட்டில் காஸா மக்களை அண்டை நாடுகளில் குடியேற்ற வேண்டும் என்ற ட்ரம்ப் திட்டத்துக்கு மாற்றாக, புதிய அமைதி திட்டம் பரிந்துரைக்கப்பட்டது.

எனினும், இந்தத் திட்டத்தை அமெரிக்க அரசும், இஸ்ரேலும் தற்போது நிராகரித்துள்ளன. இதற்கிடையே ஹமாஸ் வசமுள்ள அமெரிக்க பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் அந்த அமைப்பினருடன் அமெரிக்கா இரகசிய பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தகவல் உண்மையாக இருந்தால், 1997ஆம் ஆண்டுக்குப் பிறகு ஹமாஸ் அமைப்புடன் அமெரிக்கா பேச்சுக்களில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும். தற்போது, ஹமாஸ் பிடியில் 59 பயணக்கைதிகள் இருப்பதாகவும் இதில் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் 5 பேர் எனவும் இஸ்ரேலிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ)

# அமெரிக்க அரசுடன் கனிமவள ஒப்பந்தத்துக்கு உக்ரைன் தயார்

## ஜெலன்ஸ்கி அறிவிப்பு, ட்ரம்ப் வரவேற்பு

கீவ், மார்ச்.07

அமெரிக்காவுடன் கனிமவள ஒப்பந்தம் செய்யத் தயாராக இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கடிதம் எழுதியுள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் இடையே நீடித்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்துவது தொடர்பில் இருதரப்பிடமும் அமெரிக்கா பேசி வருகிறது. முதலில் ரஷ்யாவை வரவழைத்து அரபு நாட்டில் வைத்து போர் நிறுத்தம் குறித்து அமெரிக்கா பேசியது. இந்தப் பேச்சுக்களில் உடன்பாடு எட்டப்பட்ட நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

பின்னர் ஜெலன்ஸ்கியை அமெரிக்காவுக்கு அழைத்து பேச்சு நடத்தியது. இதன்படி வெள்ளை மாளிகையில் சமீபத்தில் நடந்த கலந்துரையாடலின் போது, ட்ரம்ப்பின் கருத்தை மறுத்து எதிர்வாதம் செய்தார் ஜெலன்ஸ்கி. இதனால் ஜெலன்ஸ்கியை ட்ரம்ப் திட்டி அனுப்பிவிட்டார்.

இது ஒருபுறமிருக்க உக்ரைனுக்கு இதுவரை செய்த செலவுகளுக்கு ஈடாக, அந்த நாட்டில் உள்ள கனிமவளங்களை வழங்குவதற்கான ஒப்பந்தம் செய்யவும் அமெரிக்கா முயற்சி மேற்கொண்டுள்ளது. வெள்ளை மாளிகையில் நடந்த பேச்சுக்களின்போது வாக்குவாதம் ஏற்பட்டபோதிலும், அமெரிக்காவுடனான கனிமவள ஒப்பந்தம் மேற்கொள்ள உக்ரைன் தயாராக உள்ளது. இது தொடர்பில் ஜெலன்ஸ்கி, அமெரிக்க ஜனா திபதி ட்ரம்புக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், ரஷ்யாவுடனான நீண்டகால போரை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியை நிலைநாட்டுவதற்காக ட்ரம்ப் தலைமையின் கீழ் பேச்சுக்களுக்கு வரத் தயாராக இருப்பதாகவும், அமெரிக்காவுடன் கனிமவள ஒப்பந்தத்தில் கையெழுத்திட விரும்புவதாகவும் ஜெலன்ஸ்கி குறிப்பிட்டுள்ளார். இந்த முடிவை ட்ரம்ப் வரவேற்றுள்ளார்.

இதுபற்றி அமெரிக்க பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய ட்ரம்ப் கூறுகையில்,

"உக்ரைன் ஜனாதிபதியிடமிருந்து முக்கியமான கடிதம் வந்தது. நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற்காக விரைவில் பேச்சுக்களுக்கு வர உக்ரைன் தயாராக உள்ளது என அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். நீடித்த அமைதியைப் பெற ஜனா திபதி ட்ரம்பின் வலுவான தலைமையின் கீழ் பணியாற்றத் தயாராக இருப்பதாகவும், உக் ரைனின் இறையாண்மையையும் சுதந்திரத்தையும் பராமரிக்க அமெரிக்கா செய்த உதவிகளுக்கு மதிப்பளிப்பதாகவும் ஜெலன்ஸ்கி கூறியிருந்தார்.

கனிமங்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தை பொறுத்தவரை, உங்களுக்கு வசதியான எந்த நேரத்திலும் அதில் கையெழுத்திட உக்ரைன் தயாராக உள்ளது என ஜெலன்ஸ்கி கூறியிருக்கிறார். இந்தக் கடிதத்தை அனுப்பியதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில், ரஷ்யாவுடனும் தீவிரமான விவாதங்களை நடத்தியுள்ளோம். அவர்கள் அமைதிப் பேச்சுக்களுக்குத் தயாராக உள்ளனர்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அசத்தல் வெற்றி

லாகூர், மார்ச்.07

தென்னாபிரிக்காவை 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி இறுதிப் போட்டியில் இந்தியாவை எதிர்த்து விளையாடவுள்ளது.

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. இதில், லாகூரில் உள்ள கடாபி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது அரையிறுதியில் நியூசிலாந்தும், தென்னாபிரிக்காவும் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, 50 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 362 ஓட்டங்கள் குவித்தது. நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா (108), வில்லியம்சன் (102) ஆகியோர் சதம் அடித்தனர். தென்னாபிரிக்கா தரப்பில் லுங்கி இங்கிடி 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

363 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி மட்டுமின்றி இறுதிப்போட்டிக்கும் முன்னேறலாம் என்ற நிலையில் தென்னாபிரிக்கா களம் புகுந்தது. ஆனால், அந்த அணியால்

9 விக்கெட்கள் இழப்புக்கு 312 ஓட்டங்கள் மட்டுமே



எடுக்க முடிந்தது. இதனால், மில்லர் சதம் அடித்தபோதும், நியூசிலாந்து அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி வெற்றி பெற்றது. இறுதிப் போட்டிக்கும் முன்னேறியது. இதனால், அந்த அணி 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை டுபாயில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இந்தியாவை எதிர்த்து விளையாடவுள்ளது. (எ)

# சேவாக் சாதனையை முறியடித்தார் மில்லர்

லாகூர், மார்ச்.07

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டி தொடரில் இந்தியாவின் முன்னாள் வீரர் சேவாக்கின் 23 ஆண்டு கால சாதனையை தென்னாபிரிக்க வீரர் மில்லர் முறியடித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணி, 9 விக்கெட்கள் இழப்புக்கு 312 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால், மில்லர் சதம் அடித்தபோதும், நியூசிலாந்து அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில், அணியின் தோல்வியால் மில்லர் அடித்த சதம் வீணானது. எனினும், சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில், இந்தியாவின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரரான வீரேந்தர் சேவாக்கின் சாதனையை அவர் முறியடித்துள்ளார். கொழும்பில் இங்கிலாந்து அணிக்கு எதிராக நடந்த போட்டியின் போது, 77 பந்துகளில் சதம் அடித்த சேவாக்கின் சாதனை முறியடிக்கப்பட்டது.

23 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. இதன்படி, சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான போட்டியில் மில்லர் 67 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் விரைவாக சதம் அடித்துள்ளார். (எ)

# ஐ.சி.சி. ஒருநாள் தொடர் ரச்சின் அரிய சாதனை

லாகூர், மார்ச்.07

நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் ரச்சின் ரவீந்திரா சதம் அடித்து அசத்தினார்.

லாகூரில் நேற்று முன்தினம் 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்தும், தென்னாபிரிக்காவும் மோதின. இதில், ரச்சின் ரவீந்திரா 108 ஓட்டங்களும், கேன் வில்லியம்சன் 102 ஓட்டங்களும் குவித்தனர்.

நியூசிலாந்து அணியின் இளம் வீரரான ரச்சின் ரவீந்திராவுக்கு இது 5ஆவது ஒருநாள் சதமாகும். இந்த 5 சதங்களையும் இவர் ஐ. சி. சி. ஒருநாள் தொடர்களான உலகக் கிண்ணம் மற்றும் சம்பியன்ஸ் கிண்ணத்தில்தான் அடித்துள்ளார். இதன் மூலம் தனது முதல் 5 ஒருநாள் சதங்களையும் ஐ.சி.சி. தொடர்களில் அடித்த முதல் வீரர் என்ற அரிய சாதனையை ரச்சின் ரவீந்திரா நிகழ்த்தியுள்ளார்.

மேலும், ஐ.சி.சி. ஒருநாள் தொடர்களில் குறைந்த இன்னிங்ஸ்களில் 5 சதங்கள் அடித்த வீரர் என்ற சாதனையையும் ரச்சின் ரவீந்திரா (13 இன்னிங்ஸ்கள்) படைத்துள்ளார். (எ)



# 362 ஓட்டங்கள் குவித்து நியூசிலாந்து சாதனை



லாகூர், மார்ச்.07

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அதிகபட்ச ஓட்டங்கள் குவித்து நியூசிலாந்து வரலாறு படைத்தது.

9ஆவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதில், லாகூரில் நேற்று முன்தினம் அரங்கேறிய 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்தும், தென்னாபிரிக்காவும் பலப்பரீட்சை நடத்தின. இதில், நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 362 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா 108 ஓட்டங்களும், வில்லியம்சன் 102 ஓட்டங்களும் குவித்தனர்.

இதன் மூலம் சம்பியன்ஸ் கிண்ண வரலாற்றில் ஒரு இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் அடித்த அணி என்ற வரலாற்று சாதனையை நியூசிலாந்து படைத்துள்ளது. இதற்கு முன்னர் நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இங்கிலாந்துக்கு எதிராக அவுஸ்திரேலியா 356 ஓட்டங்கள் அடித்திருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள நியூசிலாந்து புதிய சாதனை படைத்துள்ளது. (எ)

# பங்களாதேஷின் ரஹீம் திடீர் ஓய்வு

டாக்கா, மார்ச்.07

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர் முஷ்பிகுர் ரஹீம் (வயது- 37) ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

நடப்பு சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் பங்களாதேஷ் அணி ஜொலிக்காத சூழலில், ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் முடிவை ரஹீம் எடுத்துள்ளார்.

இதுபற்றி அவருடைய இன்ஸ்ரகிராம் பதிவில் வெளியிட்ட செய்தியில், "ஒரு நாள் போட்டிகளிலிருந்து இன்று முதல் ஓய்வு பெறுவது என்ற முடிவை எடுத்துள்ளேன். எல்லாவற்றுக்கும் கடவுளுக்கு நன்றி.

எங்களுடைய சாதனைகள் உலகளவில் கட்டுப்படுத்தப்பட்டபோதும், ஒரு விடயம் நிச்சயம். என்னுடைய நாட்டுக்காக எப்போதெல்லாம் நான் விளையாட களமிறங்கினேனோ, 100 சதவீதத்துக்கு கூடுதலாக அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் அப்போது விளையாடினேன்"- என்று குறிப்பிட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டு முதல் கிரிக்கெட் விளையாட தொடங்கிய ரஹீம், இதுவரை 274 போட்டிகளில் விளையாடி 7,795 ஓட்டங்களை எடுத்துள்ளார். அவற்றில் 9 சதங்களும், 49 அரைச் சதங்களும் அடங்கும். (எ)

# வாய்ப்புகளை வழங்கியதே எமது தோல்விக்கு காரணம்

## தென்னாபிரிக்க அணித் தலைவர்

லாகூர், மார்ச்.07

நியூசிலாந்து அணிக்கு நாங்கள் வழங்கிய வாய்ப்புகள்தான் எங்கள் தோல்விக்கு காரணம் என்று தென்னாபிரிக்க அணியின் தலைவர் தெம்பா பவுமா தெரிவித்தார்.

லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி நியூசிலாந்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இந்த நிலையில் தாங்கள் அடைந்த தோல்வி குறித்து பேசிய பவுமா மேலும் கூறுகையில்,

"362 ஓட்டங்கள் என்பது இந்த மைதானத்தில் அடிக்கக்கூடிய ஓர் இலக்குத்தான். ஒருவேளை 350 ஓட்டங்கள் வரையிருந்திருந்தால் கூட அந்த இலக்கை எட்ட முயற்சித்திருப்போம். இந்த போட்டியில் நானோ அல்லது ரஸ்சி வான்டெர் டஸனோ களத்தில் இறுதிவரை நின்று விளையாடியிருக்க வேண்டும். ஆனால், நியூசிலாந்து பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயல்பட்டு எங்களை சுருட்டி விட்டனர்.

அதேபோன்று நியூசிலாந்து அணியின் வீரர்களான ரச்சின் ரவீந்திரா மற்றும் கேன் வில்லியம்சன் ஆகியோருக்கு பாராட்டுகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த போட்டியில் நாங்கள் அடைந்த தோல்விக்கு மிக முக்கியமான காரணமாக நாங்கள் வழங்கிய வாய்ப்புகள்தான் என்று நினைக்கிறேன்"- என்றார்.(எ)

# "சாதனைகள் என்பது எனக்கு முக்கியமல்ல"

டுபாய், மார்ச். 07

சாதனைகள் என்பது தனக்கு முக்கியமில்லை என்று விராட் கோலி தெரிவித்தார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இதில், டுபாயில் நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதின. இந்திய அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இந்த நிலையில் விராட் கோலி கூறுகையில், "அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகளில் வெற்றி என்பது அழுத்தத்தை பொறுத்தது.

அதில் விக்கெட் களை கையில் வைத்துக் கொண்டு ஆழமாக நீங்கள் துடுப்பாட்டம் செய்யும்போது எதிரணி உங்களுக்கு வாய்ப்பை வழங்கும். அப்போது வெற்றி எளிதாகும். போட்டி நடைபெறும்போது உங்களுடைய தூண்டுதல்களை கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியம். மேலும், எவ்வளவு ஓட்டங்கள் ஓவர்கள் மீதும் இருக்கிறது என்பதை அறிந்து கொள்வதும் முக்கியம்.

சாதனைகள் என்பது எனக்கு முக்கியமல்ல. அது நீங்கள் பார்க்க வேண்டிய ஒன்று.

சாதனைகளை நீங்கள் பார்க்காதபோது அது வெற்றியுடன் சேர்ந்து வரும். என்னைப் பொறுத்த வரை அனைத்தையும் பெருமையுடன் எடுத்துக் கொண்டு எனது அணிக்காக பாடுபடுவேன்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்...

பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு,

போதைப்பொருள் ஒழிப்புக்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். கடந்த காலங்களில் அரசியல்வாதிகளுக்கும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. வரலாற்றில் முதல்தடவையாக போதைப்பொருள் வர்த்தகர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்குவதற்காக 14 விசேட மையங்களை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதேபோல் மருத்துவமனைகளில் போதைப்பொருள் தொடர்பில் தமிழ் மொழியில் விழிப்புணர்வு வழங்கப்படும்.

இந்த ஆண்டில் ஜனவரி 01ஆம் திகதி முதல் மார்ச் 01ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் 168 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது, 279 கிராம் ஹெரோயின், 2,140 கிராம் கேரள கஞ்சா, 423 கிராம் ஐஸ் போதைப்பொருள், 41,048 போதைப்பொருள் மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

இதேபோன்று, யாழ்ப்பாணத்தில் 104 கிராம் ஐஸ் போதைப்பொருள், 650 கிராம் கேரள கஞ்சா, 26 ஆயிரத்து 915 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. வடக்கில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனை குறைவான போக்கில் இருப்பதைக் காணமுடிகிறது. இருப்பினும், ஏனைய போதைப்பொருள் பாவனை உயர்வடைந்துள்ளது - என்றார். (ஐ)

## மனிதாபிமான...

நினைக்கவில்லை - நான் அப்படி சொல்லமாட்டேன் - என்றார்.

2009ஆம் ஆண்டில் முடிவடைந்த போரில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு நீதி வழங்கப்பட்டதா என்று மெஹ்டி ஹசன் எழுப்பிய கேள்விக்கு, “இல்லை - எந்த சமூகத்துக்கும் நீதி வழங்கப்படவில்லை” - என்று பதிலளித்தார்.

போர் குற்றங்கள் இழைத்தார் என்று அமெரிக்க வெளிவிவகார துறை குற்றஞ்சாட்டும் ஜெனரல் சவேந்திர சில்வா மீண்டும் இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துரைத்த ரணில் விக்கிரமசிங்க, “தேர்தலின்போது இராணுவ தளபதிகளை மாற்றக்கூடாது என்பது ஒரு நடைமுறை என்றார். அத்துடன், நான் பொறுப்பேற்றபோது சரிபார்த்தேன் ஜெனரல் சவேந்திர சில்வா அதில் (போர் குற்றங்களில்) ஈடுபடவில்லை”, - என்றார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் அரசாங்க தொடர்புகள் இருக்கின்றன அதை நம்பகத்தன்மையுடன் விசாரிக்க ரணில் தலைமையிலான நிர்வாகம் தவறிவிட்டது என்ற கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் குற்றச்சாட்டுகளை “அனைத்தும் முட்டாள்த்தனம்”, என்று மறுத்த ரணில், “இது கத்தோலிக்க திருச்சபையின் அரசியலுக்கு ஓர் எடுத்துக் காட்டு”, என்று கூறினார்.

முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ இருவரும் ஊழல், போர் குற்றங்களில் ஈடுபட்டார்கள். நாட்டையும் பெரும் நிதி நெருக்கடியில் தள்ளினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டு ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற பிறகு கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்யாமல் நாட்டுக்குள் அனுமதித்தது தொடர்பில் கேட்கப்பட்ட வினாவுக்கு, “அவர் (கோட்டாபய) உள்ளே வரலாம். அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. நான் எப்படி அவரை தண்டிக்க முடியும்? நான் என்ன சர்வாதிகாரியா?”, என்று கேட்டார். (ஐ)

## கைதான...

ஊடகவியலாளர்கள் வினவினார்கள்.

அதற்கு பதிலளித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், அவர் நடந்து சென்ற விதம், கையடக்கத் தொலை பேசி, முக அடையாளங்கள் மற்றும் விஞ்ஞான பூர்வ சான்றுகள் மூலம் துப்பாக்கிச் சூடு நடத்தியது குறித்த நபர் தான் எனத் தெரியவந்துள்ளது - என்றார். (அ)

## அரசாங்கம்...

அவர் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

இந்தியாமீதான டொனால்ட் ட்ரம்பின் வரி சமநிலைப்படுத்தல் தீர்மானமானது. இலங்கைக்கு ஒரு முன்னெச்சரிக்கை குறிகாட்டியாக இருக்க வேண்டும். வர்த்தக சுவர்கள் அமெரிக்காவுக்கான நமது அணுகலைத் தடுக்கும் முன்னர் அவசர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நமது மிகப்பெரிய ஏற்றுமதி சந்தை குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும். வெளிவிவகார கொள்கையில் அனுபவமின்மையை காரணமாகக் காண்பித்து இதனை உதாசீனப்படுத்தி விடக் கூடாது.

இந்த சவாலை எதில்கொள்வதற்கு கோப் தலைவராக, நான் உதவத் தயாராக இருக்கிறேன் - என்று கூறியுள்ளார். (ஐ)

## சென்.ஜோன்ஸ்...

அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அணித் தலைவர் ர. நியூட் டன், ப. நவிந்தன் ஆகியோர் அணிக்கு தொடக்கம் கொடுத்தனர். ஆரம்பமே மத்திய கல்லூரி அணிக்கு நெருக்கடியாக அமைந்தது.

இரண்டாவது பந்திலேயே நவிந்தன் ஓட்டம் எதுவும் பெறாமல் எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கார்த்திகன் நிதானமாக ஆடினார். இதனிடையே 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர் என்று விளாசி அதிரடி காட்டிய நியூட்டன் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சிமிற்ரன் சற்று நிதானித்து ஆடினார். அவரும் 49 பந்துகளில் 24 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். கார்த்திகன் 79 பந்துகளை எதிர்கொண்டு 15 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வெளியேற எஸ். தீசன் 7, அபிலாஷ் 1, க. மதுசன் 10, பருதி 6, மு. தீசன் 0 என வேகமாக விக்கெட்களை இழந்தனர். பின்வரிசை வீரர்களில் அபிஷேக் மட்டுமே போராடி 27 ஓட்டங்களை எடுத்தார்.

57.2 ஓவர்களில் 131 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்களையும் இழந்தது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் பந்துவீச்சில் ஜெ. அஷ்னாத் 5 விக்கெட்களையும் கு. மதுசன், ரன்யோ ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த சென். ஜோன்ஸ் கல்லூரி நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தொடக்க வீரர்களான வினுக்சன் 2, அபிஜோய்சந்த் 0 என ஆட்டமிழக்க மூன்றாமிடத்தில் களமிறங்கிய அனுசாந் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவருக்கு துணைநின்ற ரன்யோ அதிரடியாக ஆடி 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 20 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

32 ஓவர்களை சென். ஜோன்ஸ் கல்லூரி அணி எதிர்கொண்ட நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. அப்போது, அனுசாந் 49 ஓட்டங்களுடனும் அஷ்னாத் 29 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

யாழ். மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் நியூட்டன் 2 விக்கெட்களையும், அபிலாஷ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இன்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டமாகும். (ஐ)

## தையிட்டி...

போராட்டங்களை முன்னெடுத்து வரும் காணி உரிமையாளர்களுக்கு அரசாங்கம் முன்வைக்கும் தீர்வு தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் வினவினார்.

இதற்குப் பதிலளித்த புத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, இந்த விடயம் தொடர்பில் காணி அமைச்சு உள்ளிட்ட பல நிறுவனங்களிடம் இருந்து தகவல் சேகரிக்கப்பட வேண்டியுள்ளதனால் தமக்குக் கால அவகாசம் வழங்குமாறு கோரினார். (அ)

## வடக்கு...

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி இன்றுவரை கிடைக்கவில்லை. அனைத்து மக்களையும் விட வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. இந்த மக்களின் கோரிக்கைகளை புதிதாக வந்துள்ள இந்த அரசாங்கம் கூட இன்னும் செவிமடுக்காத நிலையில் இருக்கிறது.

இந்த அசாதாரண - நியாயமில்லாத முறைமையை மாற்றுவதற்காக - உண்மையான மாற்றத்தை கொண்டு வருவதற்காக மக்களான நாங்கள் ஒன்றுபட வேண்டும் - என்றார். (ஐ)

## வட்டு...

கல்லூரியின் அணித் தலைவர் எஸ். மதுசன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி, களமிறங்கிய யாழ்ப்பாண கல்லூரி அணிக்கு ஜோன்சன், எமக்ஸன் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர் முதல் ஓவரில் 6 ஓட்டங்கள் பெறப்பட்டன.

இரண்டாவது ஓவரை வீசிய சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பி. மதுசன் எமக்ஸனை ஓட்டம் எதுவும் பெறாமலே வெளியேற்றினார். அவரையடுத்து வந்த ஹரிசன் மறுமுனையில் ஆடிய ஜோன்சனுக்கு துணைநின்றார். இந்த இணை மிகநிதானமாக ஆடியது. 63 பந்துகளை எதிர்கொண்டு 13 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஹரிசனும் விக்கெட்டை இழந்தார். அப்போது, அணி 65 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடர்ந்து, சிறப்பாக ஆடி அரைச்சதம் கடந்து 61 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஜோன்சனும் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த வி. விஷ்ணுகோபன் 30 ஓட்டங்களை மிக நிதானமாக சேர்த்தார். ஆனால், அதற்குள் ஹர்மிசன் -01 , எஸ். மதுசன் 12, ஹமிஸ் ஹர்மிசன் 02 என சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர்.

பின்வரிசை வீரர்களில் கோபிசன் பெற்ற 14 ஓட்டங்கள் மட்டுமே அதிக ஓட்டமாக அமைந்தது. 68.2 ஓவர்கள் நிறைவில் யாழ்ப்பா ணக் கல்லூரி அணி சகல விக்கெட்க ளையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது.

சென். பற்றிக்ஸின் பந்து வீச்சில் வி. எவொன் 3 விக்கெட்களையும் பி. மதுசன், கு. சதுர்சன், வி. பிரியங்கன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு வி. டெபானோ, எஸ். ஆதித்யா ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். டெபானோ 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த டெனோவன் ஓட்டம் எதனையும் எடுக்காமல் ரன் அவுட் ஆனார்.

19 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் நேற்றைய நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அப்போது, சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 50 ஓட்டங்களை பெற்றிருந்தது.

ஆதித்யா 21 ஓட்டங்களுடனும் அபிலாஷ் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

யாழ்ப்பாண கல்லூரியின் பந்து வீச்சில் விஷ்ணுகோபன் ஒரு விக் கெட்டை கைப்பற்றினார்.

இன்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டமாகும். (ஐ)

## உண்மைகளை...

கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடரில் கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உரையாற்றியதுடன், இந்த வாரம் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார்.

அவை இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிசெய்வதை இலக்காகக் கொண்டு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்குத் தடையேற்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன.

2015 ஆம் ஆண்டு மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்த காலப்பகுதியில் மாத்திரம்தான் விதிவிலக்காக மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் இணையனுசரணையுடன் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

இம்முறை பேரவையில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகிய மூன்று கட்டமைப்புகளையும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையொன்றை நிறுவுவதன் ஊடாக நாட்டில் நிலவும் நீண்டகாலப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், 2015 செப்ரெம்பரில் அப்போதைய வெளிவிவகார அமைச்சரால் மீள்நிகழாமைக்கான உத்தரவாதமாகவும் தமிழர் இனப்பிரச்னைக்கான தீர்வாகவும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் எனக் கூறப்பட்டது. இருப்பினும், தற்போது அமைச்சர் விஜித ஹேரத்தினால் குறித்துரைக்கப்பட்ட மூன்று கட்டமைப்புகளுக்கும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தில் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில்தான் அவர்கள் கூறுவதை உண்மையிலேயே நடைமுறைப்படுத்தப் போகிறார்களா என்பது தெரியவரும்.

இதேபோன்று முன்னர் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதாக வாக்குறுதியளித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இப்போது அதனைப் பதிலீடு செய்வதற்குப் பிறிதொரு சட்டத்தைக் கொண்டுவரப் போவதாகக் கூறுகிறது.

மேலும் இலங்கையில் கடந்தகாலங்களில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையை தாம் முற்றாக நிராகரிப்பதாக கடந்த திங்கட்கிழமை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே கடந்தகால மீறல்கள் பற்றிய உண்மைகளை அறியவேண்டிய அவசியம் தமக்கு இல்லை அல்லது அவை மூடிமறைக்கப்படவேண்டும் என்ற தோரணையிலேயே தற்போதைய அரசாங்கம் செயற்படுகிறது. நல்லிணக்கம் என்பது உண்மையின் அடிப்படையிலேயே ஏற்படுத்தப்படவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமக்கு ஆணை அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறும் தற்போதைய அரசாங்கம், அந்த மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் பிரதான கோரிக்கையை இவ்வாறு நிராகரிப்பது ஏற்புடையதன்று - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இம்மாதம் 30ஆம் திகதி முதல் யாழ். - திருச்சி விமான சேவை!



யாழ்ப்பாணம், மார்ச் 07

**யாழ்ப்பாணத்துக்கும் திருச்சிக்கும் இடையிலான விமான சேவை எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இண்டிகோ விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.**

அந்தவகையில் திருச்சியில் இருந்து பிற்பகல் 01.25 மணிக்கு புறப்படும் விமானம் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை பிற்பகல் 02.25 மணியளவில் வந்தடையும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து மாலை 03.10 மணிக்கு புறப்படும் விமானம், திருச்சி விமான நிலையத்தை மாலை 04.05 மணிக்கு சென்றடையும் எனவும் இண்டிகோ விமான சேவை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## மேர்வின் சில்வா கைது!

கொழும்பு, மார்ச் 07

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் நேற்று முன்தினம் இரவு குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் குழுவினால் பரத்தரமுல்லை, பெலவத்தை பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார் எனக் கூறப்பட்டது.

களனி பிரதேசத்தில் காணி ஒன்று தொடர்பில் பொய்யான ஆவணங்களை தயாரித்து பணத்தை அபகரித்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்க ளம் ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது. (அ)

## தேசிய ஊடகக் கொள்கை ஜூன் மாதத்துக்குள் அமுல்!

கொழும்பு, மார்ச் 07

இந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் தேசிய ஊடகக் கொள்கையை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட் டுள்ளதாக வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின் போது அமைச்சர், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட மக் களுக்கு ஊடக நெறிமுறைகள் குறித்து கல்வி கற்பிப்ப தற்கான ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று கூறினார்.

மேலும், தொலைக்காட்சியின் டிஜிற்றல் மயமாக்க லும் விரைவுபடுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த செயல்முறை தாமதமாகி வருகிறது. ஆனால் இதனை விரைவில் நிறுத்த விரும்புகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புக்கு முழு ஆதரவு!

### இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்



லண்டன், மார்ச் 07

இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு முயற்சி களுக்கு இந்தியாவின் ஆதரவை அந்த நாட்டு வெளி விவகார அமைச்சர் எஸ்.ஜெய் சங்கர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

லண்டனில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ் வொன்றில் உரை யாற்றிய போதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

"எமது அண்டைய நாட்டுக்காக எமக்கு ஒரு பொறுப்பு உள்ளதைப் போன்று எமது அண்டைய நாட்டுக்கும் அவ்வாறான பொறுப்பு உள்ளது" என இந்திய வெளிவி வகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் இதன்போது சுட்டிக்காட்டிய அவர், பொருளாதார நெருக்கடியின்போது சர்வதேச நாணய நிதியத்தை விடவும் அதிக உதவி தங்களது தரப்பினரால் வழங்கப் பட்டதாகச் சுட்டிக்காட்டினார்.

(அ)

## சுகாதாரத்துறை வெற்றிடங்கள் இம்மாதம் முதல் நிரப்பப்படும்!

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி

கொழும்பு, மார்ச் 07

சுகாதாரத் துறையில் நிலவும் வெற்றிடங்களை இம்மாத நடுப்பகுதி முதல் நிரப்புவதற்கு எதிர்ப்பார்ப் பதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கடந்த 4 வருடங்களாக சுகாதாரத்துறைக்கு புதியவர்களை நியமிப்பதில் பரியப் பிரச்னைகள் காணப்பட்டதாகவும், நாட்டில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் குறைபாடுகள் உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மாத நடுப்பகுதிக்குள் 976 குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு நியமனங்கள் வழங்கப் படும் என்று அமைச்சர் கூறினார்.

மார்ச் மாத நடுப்பகுதிக்குள் 238 பொதுச் சுகாதார பரிசோதகர்கள், 65 மருந்தாளர்கள், மற்றும் 41 கதிரியக்க வல்லுநர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஏப்ரல் மாதத்தில் 3,147 தாதியர்களுக்கு நியமனங் கள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மே மாதத்திற்குள் 1,000 உதவியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட் டார். (அ)

## 5000 இற்கும் அதிக வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தயார்!

### சஜித் பிரேமதாஸ சபையில் தகவல்

கொழும்பு, மார்ச் 07

5,000 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தயாராகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வைத்தியத்துறைக்கு தகுதி பெற்று வெளிநாடு செல்லுவதற்கு வைத்தியர்கள் எதிர்பார்ப் பதாக சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.


வைத்தியர்கள் நாட்டில் தங்கியிருந்து பணியாற்றக் கூடிய ஒரு சூழல் இன்று இல்லை எனத் தெரிவித்த சஜித் பிரேமதாஸ,

வைத்தியர்களுக்கு நியமனம் வழங்குவதைப் போல வைத்தியர்களை நாட்டிலேயே பணியாற்றக்கூடிய ஒரு சூழலையும் ஏற்படுத்திக் கொடுங்கள் எனவும் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(அ)

## பெரமுனவின் கிளிநொச்சி அமைப்பாளரானார் மதன்



கொழும்பு, மார்ச் 07

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கிளி நொச்சி மாவட்ட பிரதான அமைப்பாளராக முன்னாள் சிரேஷ்ட ஊடகவியலாளரும் கிழக்கு மாகாண சுற்று லாப் பணியகத்தின் முன்னாள் தவிசாளருமான ப. மதனவாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவ ரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ மதனவாசனுக்கு நியமனக் கடிதத்தை உத்தியோகபூர் வமாக வழங்கினார். (அ)

## வட மாகாணத்தில் பரவியது ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல்!

### வைத்தியகலாநிதி எஸ்.வசீகரன்

யாழ்ப்பாணம், மார்ச் 07

கடந்த சில மாதங்களாக நாட்டின் பல பாகங்களி லும் வேகமாகப் பரவி பன்றி வளர்ப்புப் பண்ணைகளில் மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்தியது. இந்த ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி - பளை மற்றும் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதே சங்களில் அமைந்திருந்த 5 பன்றிப்பண்ணைகளிலும் பரவி பன்றிகளுக்கு பல இறப்புக்களை ஏற்படுத்தி யுள்ளதாக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

மேற்படி ஐந்து பண்ணைகளிலும் பன்றிகளின் குருதிமாதிரிகள் பெறப்பட்டு பேராதனை மிருகவியல் ஆராய்ச்சி நிலையத்தால் நோய் உறுதிப்படுத்தப்பட்ட மையை தொடர்ந்து இப்பண்ணைகளை உடனடியாக மூடி பண்ணையின் சகல நடவடிக்கைகளையும் இடைநிறுத்துவதற்கான நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு இப்பண்ணைகள் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கடந்த மூன்று தினங்களுள் மூடப்பட்டுள்ளன.

ஆபிரிக்க பன்றிக்காய்ச்சலானது மனிதரில் நோயை ஏற்படுத்தாத போதும் பன்றிகளில் மிக வேகமாகப் பரவி அவற்றில் பல இழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய நோயாகும். நோயுற்ற பன்றிகளின் நேரடி தொடுகை மூலமாக மட்டுமன்றி மனித உடல், உடை மற்றும் வாகனங்கள் ஊடாகவும் வேறு பண்ணைகளில் நோய் பரவும் வாய்ப்புகள் அதிகம் என்பதால் நோய்தொற்று கண்டறியப்பட்ட சகல பண்ணைகளையும் தற்காலி கமாக மூடி பண்ணை நடவடிக்கைகளை முடக்கி வைப்பதற்கு திணைக்களம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது-என்றுள்ளது. (அ)

## சித்த மருத்துவ தொழிற்சாலையை வடக்கில் உருவாக்க வேண்டும்!

### சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 07

சித்த மருத்துவ தொழிற்சாலையை வடக்கில் அமைக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் பாராளுமன்றத்தில் நேற்றுக் கோரிக்கை விடுத்தார்.

சித்த மருத்துவத்துக்கு தேவையான மருந்துகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை வடக்கு மாகாணத்தில் விரைவாக உருவாக்கவேண்டும் என அவர் கோரினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு-செல வுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப் பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org